<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.52/2021</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 25–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திரு.விஜயகுமார் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.விஜயகுமார் | தொழில் : மேலாளர் |
| த/பெ : | கிராமம் : ராஜன் நகர் |
| வயது : | தாலுக்கா : சத்தியமங்கலம் |

<u>வா.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி வங்கி கிளையின் மேலாளர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

10.06.2014ம் தேதியிட்ட பிரதிவாதி வாதி/வங்கிக்கு கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 04.02.2015ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதி/வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடனுக்கான அனுமதி கடிதம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 04.02.2015ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதி/வங்கிக்கு எழுதிக்கொடுத்த

கடனுக்கான கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 04.02.2015ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதி/வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடனுக்கான கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 04.02.2015ம் தேதியிட்ட பிரதிவாதி வாதி/வங்கிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி படிவம் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 05.06.2017ம் தேதியிட்ட பிரதிவாதி வாதி/வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் உயிர்ப்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 18.09.2019ம் தேதியிட்ட பிரதிவாதி வாதி/வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் உயிர்ப்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 11.02.2021ம் தேதியிட்ட வாதி/வங்கி வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகவும், 15.02.2021ம் தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 15.03.2021ம் தேதியிட்ட பிரதிவாதியின் கடனுக்கான கணக்கு பட்டியல் (கணக்கு எண்.102303261500002) உண்மை நகல் வா.சா.ஆ.10 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி வருகையில்லாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.